# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்து தல்) (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, யூலை மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 12.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) (திருத்தச்) சட்டம்

[*2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது*]

*ச. வ. ஒ. 28/2004*

## 1958 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்.*

**1.** *இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.*

*1958 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

**2.** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1958 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டத்தின் விரிவுப்பெயரானது, "தேயிலை மற்றும் இறப்பர்த் தோட்டங்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*"தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டம்" மற்றும் "தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சபை" என்பன முறையே "தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் (கூறுபோடுதலைக்கட்டுப்படுத்துதல்) சட்டம்" மற்றும் "தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சபை"எனக் குறிப்பீடு செய்யப்படுதல்,*

**3.** *முதன்மைச் சட்டவாக்கத்திலும் ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்திலும் :—*

(அ) *"தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப் படுத்துதல்) சட்டம்" என்னும் சொற்களும் ;*

(ஆ) *"தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சபை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தேயிலை, இறப்பர் மற் றும் தென்னந்தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சபை" என்னும் சொற்களும் ; அத்துடன்*

2 –PL 000287– 1,250 (2005/05)

(இ) "தேயிலை அல்லது இறப்பர் தோட்டங்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தேயிலை, இறப்பர் அல்லது தென்னந்தோட்டங்கள்" என்னும் சொற்களும்,

இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தகவல் பரிமாற்றத்தில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் "தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டம்" மற்றும் "தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சபை" என்பவற்றுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் முறையே "தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டம்" மற்றும் "தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சபை" என்பவற்றிற்கான குறிப்பீடு ஒன்றாக வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், விஸ்தீரணத்தில் நூறு ஹெக்ரயர்களுக்குக் குறையாத தோட்டம் ஒன்று அல்லது துண்டுகளாகப் பிரிப்பதன் மூலம் தென்னந் தோட்டம் ஒன்றாக அமைந்துள்ள சிறுபற்று நிலம் ஒன்று, அத்தகைய பிரிவிடலானது சபையின் முன்னைய அங்கீகாரத்துடன், எந்த நிபந்தனைகளுக்கு

*அமைய அத்தகைய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த நிபந்தனைகள் ஏதேனும் இருப்பின், அந்த நிபந்தனைகளுக்கு இணங்கவும் அத்தகைய தென்னந்தோட்டத்தின் உரித்துமாற்றத்தின் அல்லது பிரிவிடலின் விளைவாகச் செய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்படுதலாகாது.*

*இந்த உட்பிரிவில் "சிறுபற்றுநிலம்" என்பது 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் தென்னைச் சிறுபற்று நிலம் என்று பொருள்படும்.";* அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்" மற்றும் "இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் தென்னை அபிவிருத்திச் சட்டம்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அத்துடன் அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும் :—

*"(அ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;*

*(ஆ) கமத்தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;*

(இ) ஆயிரத்துத் தொளாயிரத்தி எழுபத்தைந்தாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தேயிலை ஆணையாளர் ;

(ஈ) ஆயிரத்துத் தொளாயிரத்தி எழுபத்தோராம் ஆண்டின் 46 ஆம்இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட தென்னைப்பயிர்ச்செய்கைச் சபையின் தவிசாளர் ;

(உ) ஆயிரத்துத் தொளாயிரத்தி எழுபத்தெட்டாம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ்ப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் ;

(ஊ) ஆயிரத்துத்தொளாயிரத்தி எழுபத்தி ஒன்பதாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் ;

(எ) அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு அலுவலர் ஒருவர் ;

(ஏ) நிதி அமைச்சின் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(ஐ) தேயிலை, இறப்பர் மற்றும் தென்னைப் பெருந்தோட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்து

வதற்கு என அமைச்சரால் நியமிக்கப்பட்ட வேறு மூன்று உறுப்பினர்கள் (இவர்கள் இப்பிரிவில் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்).

(2) அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளில் "அலுவலக முறையற்ற உறுப்பினர்" என்னும் சொற்கள் எவ்விடங்களில் எல்லாம் காணப்படுகின்றனவோ அவ்விடங்களில் எல்லாம் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "சேவையில் ஈடுபடுத்தலாம் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சேவையில் ஈடுபடுத்தலாம்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "சேவையில் ஈடுபடுத்தலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சேவையில் ஈடுபடுத்தலாம் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அப்பந்தியின் (ஆ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும்புதிய பந்தியினை உட்புகுத்துவதன்மூலமும்:—

"(இ) ஆயிரத்துத் தொளாயிரத்தி எழுபத்தோராம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் ஒருப்பாட்டுடன், தென்னந்தோட்டம் ஒன்று தொடர்பாகச் சபைக்குச் செய்யப்பட்ட

அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்துடன் தொடர்புபட்ட ஏதேனும் கருமங்கள் மீது அல்லது அறிக்கையிடுகின்ற நோக்கத்திற்காக தென்னைப் பயிர்ச்செய்கைச்சபையின் எவரேனும் அலுவலரைச் சேவையில் ஈடுபடுத்தலாம்,".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ மற்றும் 12ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**7.** பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 12அ மற்றும் 12ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

*"நிதியம் ஒன்றைத் தாபித்தல்.*

12அ. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சபையால் நிர்வகிக்கப்படவேண்டிய நிதியம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இது இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய நிதியத்திற்குக் கொடுத்துதவப்பட்ட பணத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப் பாட்டுச் சட்டம், 1971 ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டம் என்பவற்றில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், இறப்பர்க் கட்டுப்பாட்டாளர், தென்னை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கைத் தேயிலைச் சபை என்பன முறையே, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச் சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பணத்தொகையை, (1) ஆம் உட்பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு ஆண்டுதோறும் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) நிதியத்தில் வரவுக்கிருக்கும் பணம், சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான ஊதியக் கொடுப்பனவு உள்ளடங்கலாக இச்சட்டத்தின்கீழ் அதனுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் சபையினால் உறப்பட்ட செலவினங்கள் யாவற்றையும் ஈடுசெய்யும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

*நிதியத்தின் கணக்குகளின் கணக்காய்வு.*

12ஆ. (1) சபையானது, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு தொடர்பிலும் நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பாக முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன், விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள அத்தகைய படிவத்தில் ஆண்டு நிதிக் கூற்றைத் தயாரிக்கச் செய்வித்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்ச் சபையினால் தயாரிக்கப்பட்ட கணக்குகள், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் முடிவில் இருந்து மூன்று மாதங்கள் காலம் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வு செய்யும் நோக்கங்களுக்காக, கணக்காய்வாளர் தலைமை யதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் “தேயிலைக் கட்டுப்பாட்டு நிதியத்தின் பணத்தி லிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்,” என்னும் சொற்களுக்குப் பதிலாக “1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், மூலதன நிதியத்தின் பணத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்,”; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இறப்பர்க் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(ஆஆ) தென்னந்தோட்டம் ஒன்று தொடர்பில் மட்டும் சபைக்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றுடன் அத்தகைய கூட்டம், நுண்ணாய்வு அல்லது அறிக்கை சம்பந்தப்பட்டுள்ளவிடத்து, 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் பணத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்";

(ஈ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

(இ) அத்தகைய கூட்டம், நுண்ணாய்வு அல்லது அறிக்கையானது தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டம் ஆகியன இணைந்தும் அல்லது அத்தகைய தோட்டம் ஒன்றினது பகுதியும் மற்றும் அத்தகைய தோட்டங்களில் இன்னொன்றின் பகுதியும் தொடர்பில் சபைக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தொடர்புபட்டுள்ளவிடத்து, இச்சட்டத்தின் 12அ என்னும் பிரிவினால் தாபிக்கப்பட்ட நிதியத்தில் வரவுக்கிருக்கும் பணத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(2) சபையால் நியமிக்கப்பட்ட செயலாளர், வேறு அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் ஊதியங்கள் இச்சட்டத்தின் 12அ என்னும் பிரிவினால் தாபிக்கப்பட்ட நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 23அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"சபையிடமிருந்தான சான்றிதழ் ஒன்று இல்லாமல் உள்ளூர் அதிகார சபைகளின் குறித்தசில அலுவலர்கள் துண்டுபோடல் வரைபடத்தை அங்கீகரிப்பதைத் தடைசெய்தல்.*

23அ. (1) உள்ளூர் அதிகாரசபையின் அலுவலர் எவரும், இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் சம்மதச் சான்றிதழ் ஒன்று அத்தகைய தோட்டம் தொடர்பில் சபையால் வழங்கப்பட்டிருந்தாலன்றி, விடயத்திற்கேற்றவாறு இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட தேயிலைத் தோட்டம், இறப்பர்த் தோட்டம் அல்லது தென்னந்தோட்டம் ஒன்றாக இருக்கின்ற ஏதேனும் காணித்துண்டின் துண்டு போடல் வரைபடத்தை அங்கீகரித்தல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற உள்ளூர் அதிகாரசபையொன்றின் எவரேனும் அலுவலர், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் ஒருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல், ஒரு வருட காலத்தை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவுக்கு முரணாகக் காணியைத் துண்டாடும் வரைபடம் ஒன்று தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரம் வெற்றானதும் வறிதானதுமாதல் வேண்டும் என்பதுடன், அது சட்டத்தில் எத்தன்மைத்தானதுமான செல்லுபடியாந்தன்மையைக் கொண்டிருத்தலும் ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "பிரிவிடல் வழக்கு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக் கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

"தென்னந் தோட்டம்" என்பது 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத் தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட தோட்டம் ஒன்றாக உள்ளதும் அல்லது தோட்டமொன்றாகக் கருதப்பட்டதுமான பரப்பளவில் நான்கு ஹெக்ரயரைவிடக் குறையாத தென்னந்தோட்ட மொன்று எனப் பொருள்படும் ;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை என்று பொருளாவதுடன், அது ஏதேனும் அத்தகைய சபை அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் மற்றும் நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு நேரொத்த அல்லது அதேபோன்ற தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

(ஆ) "இறப்பர்த் தோட்டம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "நாற்பது ஹெக்ரயர்களுக்குக் குறையாத இறப்பர்த் தோட்டம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இருபது ஹெக்ரயர்களுக்குக் குறையாத இறப்பர்த் தோட்டம்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்"; அத்துடன்

(இ) "தேயிலைத் தோட்டம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "நாற்பது ஹெக்ரயர்களுக்கு குறையாத தேயிலைத் தோட்டம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இருபது ஹெக்ரயர்களுக்கு குறையாத தேயிலைத் தோட்டம்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*புதிய சபை அமைக்கப்படும் வரை ஏலவே உள்ள சபை தொடர்ந்திருத்தல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முன்னர் பதவி வகிக்கின்ற தேயிலை மற்றும், இறப்பர்த் தோட்டங்கள் (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சபையின் உறுப்பினர்கள் இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் சபையானது அமைக்கப்படும்வரை, மட்டுமே அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்